காதல் எப்படியெல்லாம்...

5

டாக்டர் ராஜ்மோகன்

'நாலெல்லாம் கண்டிப்பா லவ் மேரேஜ்தான்' என்ற ஆவேச டயலாக்கோடு என்னிடம் பேச ஆரம்பித்தாள் ஒரு கல்லூரி மாணவி.

"பின்ன என்ன சார்? அறிமுகமே இல்லாத ஒருத்தன் நல்லவனாயிருப்பான்... நம்மளைப் புரிஞ்சு நடந்துக்குவான்னு எப்படி நம்ப முடியும்? அரேஞ்சுடு மேரேஜெல்லாம் லாட்டரி சீட்டை விட மோசமான சூதாட்டம். லாட்டரில பரிசு விழலைன்னா, கிழிச்சுப் போட்டுட்டு இன்னொரு தடவை ட்ரை பண்ணலாம். வாழ்க்கை அப்படியா? அதனால நல்லா பழகி புரிஞ்சிக்கிட்ட பிறகுதான் கல்யாணம். எதுக்கு ரிஸ்க்?" என்பது அவளின் தீர்க்கமான முடிவு.

இவ்வளவு சிந்திக்கும் தெளிவு இந்தக் கால இளைஞர்களுக்கு இருக்கையில், அவர்களின் எதிர்காலத்தையும் அவர்களே தீர்மானிப்பதில் தவறு எதும் இல்லை என்பது என் கருத்து.

ஆனால், இந்தத் தெளிவு எல்லோரிடமும் இருக்கிறதா?

எதைப் பற்றியும் தெரியாமலே, சிந்திக்காமலே ஃப்ரண்ட்ஸ் மத்தியில் தன் இமேஜை உயர்த்திக் கொள்ளும் ஒரே காரணத்துக்காக லவ் மேரேஜை லட்சியமாக வைத்திருப்பவர்கள் நம்மைச் சுற்றி நிறைய பேர் இருக்கிறார்கள். இரண்டு மனங்களின் ஒசையில்லாத ஒப்புதலின் பேரில் வருவதுதான் காதலே தவிர ஒருவரின் அவசரத்துக்காக வரவழைக்கப்படுவது அல்ல.

இயல்பான காதல், மரத்திலேயே பழுத்த பழம் என்றால், இப்படி வரவழைக்கப்படும் காதல் புகை போட்டு பழுக்க வைப்பது போன்றது. "இரண்டிலுமே தவறு இல்லையே! எப்படியோ காதல் பழுத்தால் சரிதானே!" என்று வாதிடுபவர்களிடம் நான் எப்போதுமே எடுத்துச் சொல்வது மகேஸ்வரியின் கதையைத்தான்.

படிப்பிலும் புத்திசாலித்தனத்திலும் முதல் ஆளாக பேர் வாங்கும் மகேஸ்வரிக்கு கொஞ்சம் திக்குவாய் என்பதைத் தவிர, வேறு எந்தக் குறையும் இல்லை. அதனால் சின்ன வயதிலிருந்து அடுத்தவர்களின் கேலிப் பேச்சுக்களால் மனம் குறுகி வளர்ந்திருக்கிறாள் அவள். கல்லூரி வந்தும் அதே நிலைதான். அதிலும் அவள் வயதுப் பெண்கள் பையன்களிடம் பேசும்போதும், பழகும்போதும் 'இவ பேச ஒரு மணி நேரம் ஆகும்ம' என்கிற ரீதியில் கிண்டல் மொழிகள் பறக்க, இவள் மட்டும் தனியே ஒதுக்கப்பட்டிருக்கிறாள். பள்ளி நாட்களில் இருந்தே தொடரும் விஷயம்தான் என்றாலும், கல்லூரிக்கு வந்திருப்பது பருவ வயது மகேஸ்வரி அல்லவா? அவளால், இந்தப் புறக்கணிப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எல்லோரைப் போலவும் தனக்கு ஆசைகள் இருக்கிறது. தன்னையும் ஒரு மனித ஜீவனாக எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதற்கு எல்லோரையும் போல தானும் காதலித்துக் காட்ட வேண்டும் என்று ஒரு கட்டத்தில் முடிவெடுத்தாள் மகேஸ்வரி. அதற்காக அவள் பலியிட்டது 40 வயது நிரம்பிய ஒரு கல்லூரி லெக்சரரை.

அவரது கதை பரிதாபத்துக்குரியது. ஏழெட்டு தங்கைகளுக்கு பொறுப்பான ஒரே அண்ணனாக அத்தனை பேரையும் வளர்த்து ஆளாக்கி, அவர்களுக்காகவே கல்யாணம் செய்து கொள்ளாமல் இருந்தவர் அவர். மகேஸ்வரி காதலை சொன்னதும் அதிர்ந்திருக்கிறார். அதட்டி மறுத்து, அவள் வருத்தத்தைக் கூட்டவும் மனசில்லை. கடமைகளும் முழுவதுமாக முடியவில்லை என்று கொஞ்சநாள் தவித்திருக்கிறார். என்னதான் பிரம்மச்சர்யம் அனுசரித்திருந்தாலும், ஒரு கட்டத்துக்கு மேல், 'வயசாகிவிட்டது; இனி தன்னை யார் விரும்பப் போகிறார்கள்?' என்ற தாழ்வு மனப்பான்மை வருவது மனித இயல்புதானே! அதுவும் சேர்ந்து அவரை சம்மதிக்க வைத்திருக்கிறது.

மகேஸ்வரியை அவர் உண்மையாகக் காதலித்தாலும் படிப்பு முடியும் வரை காத்திருப்பது; அதுவரை இதை வெளியே தெரியாமல் காப்பாற்றுவது என்பது அவரது முடிவு. ஆனால், மகேஸ்வரியின் டிட்டமே தான் காதலிக்கப்படுவதை எல்லோருக்கும் தெரியப்படுத்துவதுதானே! "நான் அவரோட இன்னிக்கு எங்க போனேன் தெரியுமா?" என்ற தோரணையில் அவளே அந்தக் காதலை விளம்பரப் படுத்த, நினைத்தது போலவே தோழிகளுக்கு மத்தியில் இவள் மதிப்பு கூடினாலும், அந்த ஆசிரியரின் மரியாதை பாதாளத்துக்குப் போய்விட்டது. நிர்வாகம் அவரை டில்மில் செய்ய, அவர் குடும்பமே சிதைந்து போகும் நிலை.

"திக்குவாய்னா என்ன? அதுக்காக இவ்வளவு வயசானவனையா கல்யாணம் பண்ணிக்கறது?" என்பது விஷயம் தெரிந்த அவள் பெற்றோரது ஆதங்கம். "எனக்கு யாருமே ஆதரவா இல்ல. அம்மாவே சில சமயம் திக்குவாய்னு திட்டுவாங்க. அதனாலதான் ஆறுதல் தேடி இப்படி பண்ணினேன்" என்று என்னிடம் நேரடியாகவே வாக்குமூலம் கொடுத்தாள் மகேஸ்வரி. கொஞ்ச நேரத்திலேயே தன் காதல் செயற்கையானது என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. இனிமேல் திருந்தி அப்பா, அம்மா சொல்படி கேட்டு நடக்கவும் அவள் ரெடி. ஆனால், அந்த ஆசிரியரின் நிலை...? சும்மா இருந்த தனக்கு ஆசை காட்டி, வேலைக்கே உலை வைத்து விட்டு, இப்போது ஸாரி சொல்லும் அவள் மேல் கொலை வெறியோடு இருந்தார் அவர். அவரை சமாதானப் படுத்தி அனுப்பி வைத்ததுதான் என் வேலை.

இந்த மாதிரியான காதல்களையும் கட்டாயக் காதல் வகையில்தான் சேர்க்க வேண்டும். அதாவது, 'என்னைக் காதலி' என்று இன்னொருவரை கட்டாயப் படுத்துவது போல 'யாரையாவது காதலி' என்று தன்னையே கட்டாயப்படுத்திக் கொள்வதுதான் இது. காதல்தான் எதிர்பாலரிடமிருந்து தனக்கு கிடைக்கும் அங்கீகாரம் என்று நினைக்கும் நிறைய ஆண்களை நம்மால் பார்க்க முடியும். எல்லோருக்குள்ளுமே அந்த உணர்வு ஒரு ஓரத்தில் ஒட்டிக் கொண்டு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், மகேஸ்வரி அதை கண்முடித்தனமாக செயல்படுத்தியதற்குக் காரணம் புறக்கணிப்பு. மனித மனத்தால் தாங்கிக் கொள்ளவே முடியாத வன்முறை இது.

ஆனாலும், யாராவது ஒருவரை எந்தக் காரணத்துக்காவது ஒதுக்கி வைப்பது நம் சமூகத்தில் சகஜம். எல்லா நண்பர்கள் வட்டத்துக்குள்ளும் இந்த ஜாலி விளையாட்டு இருக்கிறது. திக்குவாய் போன்ற உடல் ஊனமாக இல்லாவிட்டாலும், 'இவ சைலஃக்கு ஃபேஷனாள டிரஸ்லெல்லாம் போட முடியாதுப்பா' என்றோ, 'இவளுக்கு பசங்களைப் பார்த்தாவே வேர்த்துக் கொட்டுமே' என்றோ ஒருத்தியை வெகு சாதாரணமாக நாம் புறக்கணித்து விடுகிறோம். நமக்கு விளையாட்டாகவும் அன்பின் வித்தியாச வெளிப்பாடாகவும் தெரிந்தாலும், இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைப் பற்றி நாம் யோசிப்பதில்லை. ஆண்களைப் பொறுத்தவரை கொஞ்சம் நல்லவனாக இருந்தாலே ஒதுக்கி வைப்பார்கள். அவர்களுக்கு 'வேஸ்ட் பார்ட்டி' என்ற பெயரும் இலவச இணைப்பு. நண்பர்கள் தன்னையும் ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே குடி, சிகரெட் என்று வீம்பாகப் பழகி, வீணாகப் போனவர்கள் எத்தனையோ பேரை நான் பார்த்திருக்கிறேன். மகேஸ்வரி செய்ததும் இப்படிப்பட்ட தவறுதான். இதற்கு மகேஸ்வரி மட்டுமே காரணமில்லை என்பதுதான் இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது.

– ஆராய்வோம்...